நாள்- 22.09.2023

Case No.OS.217/2017 (PW1 Cross continuation)

PW.1- ராஜ்மோகன்–பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண். 235/2010 தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தம் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2** (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) அசல் வழக்கு எண். 235/2010 வழக்கில் சி.வி.சுப்பிரமணியம் 2 வது சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சாட்சியம் அளித்துள்ளார். அசல் வழக்கு 235/2010 வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 92/2008 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது பற்றி தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வேலூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு ஞாபகமில்லை. அசல் வழக்கு எண். 92/2008 வேலூர் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை என்னுடையதா என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)